in different

quality of
9.
sand Oaks,

to Finish.

rk: Oxford

ers. Society

the role of
ciences, 29,

nstitutional
Social and
87
quality in
5th World
Behavioral





# ஐசக் அருமைராசன் நாவல்களும் விடுதலை இறையியலும்

அல்போன்சாள், இ.,
தமிழ்த்துறை, ஜெ.அ. மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்.

## முன்னுரை

கிறித்தவ சமயம் மட்டுமன்றி உலகெங்கிலும் காணப்படும் எல்லாச் சமயங்களிலும் விடுதலை இறையியல் என்னும் கோட்பாடு பேசப்பட்டு வருகிறது. இந்தியாவில் சுவாமி அக்கினிவேஷ் என்பவர் இந்து சமயத்தினுள்ளும் விடுதலை இறையியலின் கோட்பாடுகளைப் பொருத்திப் பார்த்து சாதி அமைப்பிலிருந்தும் மாறிய புதிய மத ஒழுங்குகளை உருவாக்க முனைகிறார். பொதுவாக, தனித்த இறையியல் என்று ஒன்று கிடையாது. சூழல் சார்ந்த இறையியலே உள்ளது. இன்னும் கூறப்போனால் மனித வாழ்க்கையைத் தொடாத எந்த இறையியலுமே பொருளற்றதாகக் காணப்படும். இது குறித்துச் செல்வராசு என்பவர்,

> "இறையியலாளர் பெலிக்ஸ் வில்பிரட் அவர்கள் விடுதலை மற்றும் சூழல் இறையியலுக்குப் பெரும்பங்கு அளித்திருக்கிறார். சூழலைத் தொட்டு, உரசி உரையாடாத இறையியலாக்கம் பொருளற்றது. இவ்வாறு உரை யாடுவது ஏழை எளியவரின் வாழ்வை வளப்ப டுத்துவதாகவும், சமத்துவ சமுதாயப் படைப்புக்கு வித்திடுவதாகவும், தனிமனித மன மாற்றத்திற்குத் தூண்டுகோலாகவும் அமைய வேண்டுமென வாதாடுபவர் பெலிக்ஸ்"1.

என்று கூறுவதிலிருந்து விடுதலை இறையியலை வளர்த்தெடுக்க இறையியலாளர் பெலிக்ஸ் வில்பிரட் என்பவர் சூழலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பது தெரியவரும்.

சூழல் சாராத இறையியல், இறையியல் ஆகாமல் வெறும் சட்டமாகவே கருதப்படும். இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படும்போதுதான் மதவாதமும், மதப்பயங்கரவாதமும் உருவாகின்றன. ஒரு மதத்தின் பன்முகப் பரிமாணங்களை ஒதுக்கிவிட்டு, தன்னல நோக்குடன் ஒற்றைப் பரிமாணத்தை மட்டுமே மக்கள்மேல் திணிப்பது மத அடிப்படைவாதத்தையே உருவாக்கும். எடுத்துக்காட்டாக, இந்து மதத்தின் மனுஸ்மிருதியையும், தலிபான்களின் இஸ்லாமியச் சட்டங்களையும் கூறலாம்.

1960-களில் இலத்தீன் அமெரிக்காவில் அரசியல் பின்னணியுடன் தோற்றம் பெற்ற நிகழ்வையே விடுதலை இறையியலின் தோற்றமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், கிறித்தவர்களின் மத நூலான பைபிளிலேயே விடுதலை இறையியலின் உள்ளடக்கம் பொதிந்து கிடக்கிறது. பழைய ஏற்பாட்டில் கடவுளின் விடுதலைச் செயல்பாடு முதலில் பேசப்படுகிறது. இரண்டாவதாக, மோசேயின் தலைமையில் இஸ்ரவேல் மக்களின் அரசியல்

விடுதலை. மூன்றாவதாக, இறைவாக்கினர்களின் நீதிக்கான குரல். தொடர்ந்து மேசியாவின் வருகைக்கான ஏக்கம். இவை அனைத்துமே இறையியலில் தனித்து நிற்காமல் ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழலோடு இயக்கம் கொள்கிறது என்பதை உணரலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பு, ரோம சாம்ராஜ்யத்துக்கு எதிரான விடுதலையின் நற்செய்தியாகப் பேசப்படுகிறது. ஏழைகளின் ஒருமைப்பாட்டைச் சார்ந்துநின்ற இயேசுநாதர் நிகழ்த்திய செயல்கள், கடவுளை, சமய வழிபாடுகளை, வாழ்வியல் மதிப்பீடுகளை, யூதமதச் சட்டங்களை, விமர்சித்து அவர் காட்டிய வெளிப்பாடுகள் அனைத்துமே விடுதலையோடு தொடர்பு கொண்டவைதாம். இயேசுவின் மரணத்திற்குப் பிறகு அவருடைய சீடர்கள் ஆற்றிய பணிகள், இறையனுபவக் கடிதங்கள் ஆகியவை அனைத்துமே விடுதலையின் செயல்பாடுகளையே கொண்டு திகழ்கின்றன. இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அவரைச் சார்ந்த மக்கள் இரண்டு விதங்களில் அடிமைப்படுத்தப்பட்டனர். முதலாவதாக, ரோம அரசாங்கத்தின் அடிமைத்தனம். இரண்டாவதாக, சொந்த யூத இனத்திலுள்ள மதவாதிகளின் அடிமைத்தனம். இயேசுகிறிஸ்து இந்த இரண்டு அடிமைத்தனங்களுக்கும் எதிராகப் போராடியதால்தான் மரணத்துக்கு உட்படுத்தப்பட்டார். ஆனால், இயேசுநாதர் எடுத்த நிலைப்பாடுகள் அனைத்துமே ஏழை மக்களின் விடுதலைக்கு உரியதாகவே இருந்தன.

இலத்தீன் அமெரிக்காவிலும் இதன் அடிப் படையிலேயே விடுதலை இறையியல் தோற்றம் பெற்றது. அதுவும் இரண்டு விதமான போராட்டங்களை நடத்தியது. ஒருபுறம் ஐரோப்பிய மரபார்ந்த இறையியலை கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்தபோதே மறுபுறம் அரசாங்கத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த ஆயுதப் புரட்சியையும் ஆதரித்தது. இலத்தீன் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இறையியலாளர்களான குஸ்தாவோ குற்றியரேஸ், சொப்ரீனோ, வறீகோ ஆஸ்மான், செக்குண்டே, லெயோனார்டு பரஃப், இஞ்ஞாசி எலாக்குரியா ஆகியோர் தங்களது நாட்டு அவல அனுபவத்திலிருந்து இறையியலின் விடுதலைக் கூறுகளை முதன்மைப் படுத்தினர்.

இதன் தாக்கத்தால் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள இறையியலாளர்கள் தங்கள் சமுதாய வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இறையியலாக்கம் செய்ய முயன்றனர். இதன் அடிப்படையில் பலவகையிலான விடுதலை இறையியல்கள் தோன்றலாயின. அவை முறையே,

i. கறுப்பு விடுதலை இறையியல்
ii. தலித் விடுதலை இறையியல்
iii. பெண் விடுதலை இறையியல்
iv. காலனிய விடுதலை இறையியல் என்பன.

_ர்ந்து மேசியாவின்
து நிற்காமல் ஒரு
ாம்.
பத்துக்கு எதிரான
_டைச் சார்ந்துநின்ற
ளை, வாழ்வியல்
வெளிப்பாடுகள்
ின் மரணத்திற்குப்
ங்கள் ஆகியவை
. இயேசுகிறிஸ்து
ப்படுத்தப்பட்டனர்.
, சொந்த யூத
இந்த இரண்டு
ட்படுத்தப்பட்டார்.
ின் விடுதலைக்கு

லை இறையியல்
ியது. ஒருபுறம்
போதே மறுபுறம்
த்தது. இலத்தீன்
ஸ், சொப்ரீனோ,
எலாக்குரியா
ன் விடுதலைக்

ார்கள் தங்கள்
ன்றனர். இதன்
யின. அவை





மேற்கூறிய அனைத்து விடுதலை இறையியல்களின் பொதுவான செயல்பாடு அதன் விடுதலைக்கான இயக்கமாகும். இந்த விடுதலை இறையியல் இடத்திற்கு ஏற்ப, நாட்டிற்கு ஏற்ப, மக்களின் சமூக பண்பாட்டு அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வகைப்படுத்தி விளக்கம் பெறுகிறது என்றே கூறலாம்.

ஐசக் அருமைராசனின் நாவல்களில் 'கீறல்கள்' என்னும் நாவல் விடுதலை இறையியல் கருத்துக்களை முழுக்க முழுக்கச் சுமந்து நிற்கிறது. கிறித்தவ சமுதாயத்திற்குள் நடைபெறும் வர்க்க முரண்பாடுகளை எடுத்துக்கூறும் நூலாசிரியரின் இதர நாவல்களிலும் இக்கருத்தாக்கம் பரவலாக வெளிப்பட்டு நின்றபோதிலும், அதிகமாக 'கீறல்கள்' நாவலிலும், அதற்கடுத்தபடியாகக் 'கல்லறைகள்' நாவலிலும் தீவிரமாக வெளிப்படுகின்றன. 'கீறல்கள்' நாவலில் வரும் மேட்டுக்குடியாரை எதிர்த்துப் பாதிக்கப்பட்ட முத்தையா, செல்லப்பா ஆகியோர் வெவ்வேறு வடிவங்களில் போராட்டம் நடத்துகிறார்கள். இதில் பரமசிவம் என்ற கிறித்தவரல்லாத ஒருவரும், வேதமணி வாத்தியார் என்ற கிறித்தவரும், நாட்டையரும் போராட்டத்தை வலுப்படுத்துவதற்கு ஆதாரமாக நிற்கிறார்கள்.

'கல்லறைகள்' நாவலில், சங்கரன் என்ற இந்து சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவன் தேவசகாயம் என்ற முதலாளியை எதிர்த்து சங்கத்தின் வாயிலாகப் போராடுகிறான். கிறித்தவர்கள் நடத்தும் போராட்டங்களில் இந்துசமய மக்களையும் பங்குகொள்ளச் செய்வது ஐசக் அருமைராசனின் மனவிரிவையும், விடுதலை வெளிப்பாட்டையும் ஆழப்படுத்துகிறது. மட்டுமல்ல, கிறித்தவ முதலாளி களிடமிருந்து கிறித்தவர்களைப் பாதுகாக்க நடத்தும் போராட்டத்தில் இந்துசமய மக்களும் பங்குபெறுவது மதநல்லிணக்கத்தின் வாயிலான இறையியல் சிந்தனையைக் காட்சிப்படுத்துகிறது எனலாம்.

'கீறல்கள்' நாவல் காட்டும் கிராம அமைப்பு பல்வேறு சமுதாய மக்கள் சேர்ந்து வாழும் அமைப்பாகும். அவர்களில் முதலாளிகள் ஒருவருக்கொருவர் காப்பாற்றக் கூடியவர்களாகவும், தங்களை விட்டுக் கொடுக்காதவர்களாகவும் காணப்படுகின்றனர். ஐசக் அருமைராசன் வெளிப்படுத்தும் புன்னைக்காடு கிராமத்தில் மேட்டுக் குடியார் மற்றும் முந்திரித் தொழிற்சாலை அதிபர் ஆரோக்கியசாமி, பருத்தி வியாபாரி சிவபாதம் நாடார், கருப்புக்கட்டி வியாபாரி சந்தோஷ நாடார். கட்டிட ஒப்பந்தக்காரர் சூசைமரியான், எண்ணெய் வியாபாரி அன்சாரி சாகிபு ஆகியோர் முதலாளி வர்க்கத்தினராகக் காணப்படுகின்றனர். இவர்களால் அடக்கியாளப்படுகிறவர்களாக முத்தையா மற்றும் பரமசிவம் ஆகியோரின் குடும்பங்கள் திகழ்கின்றன. இவர்களுக்கு இடையிலான பொருளாதார சமூக வேறுபாடுகளைக் களைவதற்காக வேதமணி வாத்தியாரும், சாமுவேல் என்ற அருட்பணியாளரும், முத்தையாவின் மகனான செல்லப்பாவும் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். இம்மூவரும் மூன்று பாதை களில் தங்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். செல்லப்பா என்கிற மகன் கதாபாத்திரம்,

வர்க்கப்போராட் டத்தை வலுப்படுத்துவதற்காகத் தீவிரவாதி யாக மாறுகிறான். காவலர் களால் சுடப்பட்டு இறக்கிறான்.

'கீறல்கள்' நாவலில் இருந்து சற்று வித்தியாசப்பட்ட முதலாளியாக 'கல்லறைகள்' நாவலில் தேவசகாயம் அறிமுகமாகிறார். இவர் திருச்சபையில் செயலாளராகவும், கிறித்தவ சமுதாயத்தில் முதன்மை பெற்றவராகவும் விளங்குகிறார். அதே கிறித்தவ சமுதாயத்தைச் சார்ந்த செல்வமணி என்ற ஏழை வசித்த, அவரது வாழ்வுக்கு ஆதாரமான சுக்குநீர் காப்பிக்கடையை இடிப்பதோடு அவரைக் காரேற்றிக் கொலைசெய்யவும் முற்படுகிறார். இறுதியில் கமலா, ராணி என்ற செல்வமணியின் இரண்டு பெண்மக்களை வீட்டோடு வைத்துக் கொளுத்திக் கொலையும் செய்கிறார்.

'கல்லறைகள்' நாவலில் வர்க்கப்போராட்டம் என்பது தேவசகாயம் மற்றும் செல்வமணி என்பவரோடு மட்டும் அடங்கவில்லை. அதற்கு மேலே திருநந்திக்கரை என்ற ஊரில் வாழும் சமூகத்தோடும் அது தனது கரங்களை நீட்டி விரிக்கிறது. ஊரிலே தேவசகாயத்தின் விளையில் மரச்சீனிக் கிழங்கு பிடுங்கும் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டும், மருத்துவ வசதி கேட்டும் போராடுகிறார்கள். அதனை அடக்க முற்படும் தேவசகாயம் வெளியூரிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதிசெய்து அவர்களின் போராட்டத்தை உடைக்கிறார். தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வதைப் பார்த்து ரசிக்கும் தேவசகாயம் க்தை ஓட்டத்தில் அவரது மகன் ஜாண்சன்தம்பி வாயிலாக முரணுறுகிறார். தந்தைக்கு எதிராகக் கிளம்பும் மகன் நியாயம் பேச முற்படுகிறான். ஆனால் மகனைக் கண்டிக்காமல் அதற்குக் காரணமாக இருந்த செல்வமணியின் இரண்டு மகள்களையும் தீயிட்டுக் கொளுத்தும் தேவசகாயம் இறுதி வரையில் திருந்தவில்லை. திருச்சபையும் அதில் வேலை செய்யும் போதகர்களும் முதலாளிகளின் கட்டுப்பாடுகளிலேயே இருப்பதும் அநீதிக்கு ஆதரவாளர்களாகவே திகழ்வதும் நிகழ்கிறது. இவ்விரு நாவல்களுமே கிறித்தவ இறையியல் கருத்துக்களை வலியுறுத்துவதற்குப் போதிய ஆதா ரங்களைக் கொண்டு திகழ்வதுடன் அதனை வலியுறுத்தவும் செய்கின்றன. இவ்விரு நாவல்களிலும் வெளிப்படும் கிறித்தவ விடுதலைக் கருத்தாக்கங்களைக் கீழ்க்கண்ட தலைப்புகளில் வரிசைப்படுத்தலாம்.

i. வர்க்கப் போராட்டம்
ii. கிறித்தவத்தின் செயல்பாடு
iii. போராட்ட வடிவங்கள்
iv. புதிய விளக்கங்கள்
v. சமத்துவ வாழ்வு

நினைத்துக் கொள்கிறார். கிறிஸ்துவின் ஆற்றலை, அருளை, அன்பைக் குறுகலான இடத்திற்குள் அடைத்து வைத்து அனுபவிப்பது ஒருபோதும் கிறித்தவம் ஆகாது. கிறிஸ்துவின் அருளானது இந்த உலகம் முழுவதும் பரந்து விரிந்தது. அது மென்மேலும் பரந்து கொண்டு இருக்குமே தவிர ஒருபோதும் அழியாதது. கம்யூனிசத்துக்குள்ளும் கிறிஸ்துவின் அருள் ஆற்றல், அன்பு செயல்படக்கூடியது என்று நினைத்தவாறு நடந்தார் சாமுவேல் நாட்டையர். வேதமணி வாத்தியார் என்பவர் விதைத்த கம்யூனிசத்தின் கருத்துக்கள் சாமுவேல் நாட்டையரின் மனதிற்குள் தங்கி அதனைக் கிறித்தவத்தோடு இணைத்துப் புதிய வடிவத்தில் வெளிப்படுகிறது என்று சொல்லலாம்; மட்டுமல்ல, இந்நாட்டுக் கிறித்தவர்கள் ஒவ்வொருவரும் கம்யூனிசத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது நல்லது. அவர்கள் கம்யூனிச இயக்கத்தைப் பகைக்காமல் அதனோடு உறவு வைத்து அதன் நடுவிலும் தொண்டு செய்ய வேண்டும் என்ற கருத்து, 'கீறல்கள்' நாவலில் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த நாவலில் சாமுவேல் நாட்டையருக்கு எதிர்கதாபாத்திரமாகப் பிலிப்பு நாட்டையர் என்ற கதாபாத்திரம் வருகிறது. பிலிப்பு நாட்டையர், சாமுவேல் நாட்டையருக்கு எதிரான கருத்தைக் கொண்டிருக்கிறார். இந்த நாட்டில் கம்யூனிசம் வந்தால் கிறித்தவன் செத்தான் என்று சொல்லும் பிலிப்பு நாட்டையர் சாமுவேல் நாட்டையரிடமிருந்து வேறுபடுவது போல, கம்யூனிச இயக்கத்துக்குள்ளும் கிறித்தவன் தொண்டு செய்ய வேண்டுமென்ற வேதமணி வாத்தியாரின் கருத்திலிருந்தும் வேறுபடுகிறார். இவற்றிலிருந்து கம்யூனிசம் உணர்த்துவது போலவே கிறித்தவமும் வர்க்கப் போராட்டத்தையே முன்னிறுத்துகிறது என்ற முடிவுக்கு வரலாம்.

## ii. கிறித்தவத்தின் செயல்பாடு

கிறித்தவச் செயல்பாட்டின் அடிப்படை தியாகம் ஆகும். இதனைக் 'கீறல்கள்' நாவலில் வரும் செல்லப்பா என்ற கதாபாத்திரம் முன்வைத்துச் செயல்படுகிறது. 'கோதுமைமணி மண்ணில் விழுந்து செத்தால் ஒழிய அது முளைக்காது' என்ற வேதவசனத்தை ஓரிடத்தில் செல்லப்பா கதாபாத்திரம் மேற்கோளாகக் காட்டிப் பேசுகிறது. ஆனால், வேதமணி வாத்தியார் என்ற பாத்திரம் எந்த அளவிற்குக் கொள்கைப் பிடிப்புடன் இருக்கிறதோ அந்த அளவிற்கு இதர கதாபாத்திரங்களான முத்தையா, சாமுவேல் நாட்டையர் ஆகியவர்கள் போராட்டத்தில் காலூன்றாமல் சற்றே விலகும்படியான சூழ்நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. அப்போதுதான் திருச்சபையின் செயல்பாடல்ல கிறித்தவனின் செயல்பாடு என்கிற முக்கியமான கொள்கையை நோக்கி வேதமணி வாத்தியார் என்கின்ற கதாபாத்திரத்தை நாவலாசிரியரால் நகர்த்திச் செல்லமுடியும். அவரது ஆதரவு அதுவாகத்தான் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, மேட்டுக்குடியான் என்பவர் முந்திரித்தொழிற்சாலையை விலைக்கு வாங்கிய உடனேயே முத்தையாவின் வேலை பறிபோய் விடுகிறது. ஊர்

றுகிறான். இறுதியில்

ளியாக 'கல்லறைகள்
ாளராகவும், கிறித்தவ
த்தவ சமுதாயத்தைச்
ஆதாரமான சுக்குநீர்
பவும் முற்படுகிறார்.
ங்களை வீட்டோடு

வசகாயம் மற்றும்
ருநந்திக்கரை என்ற
க்கிறது. ஊரிலே
கள் கூலி உயர்வு
அடக்க முற்படும்
து அவர்களின்
திக் கொள்வதைப்
ன்தம்பி வாயிலாக
டுகிறான். ஆனால்
ரியின் இரண்டு
திருந்தவில்லை.
ப்பாடுகளிலேயே
றது. இவ்விரு
போதிய ஆதா
ன. இவ்விரு
க் கீழ்க்கண்ட





மேற்கூறிய அம்சங்கள் 'கீறல்கள்' மற்றும் 'கல்லறைகள்' நாவல்களில் வெளிப்படும் கருத்தியல்புகளாக அதிகமும் காணப்படினும் விடுதலை இறையியல் என்ற சிந்தனையின் பல்வேறு வடிவங்களை வெளிப்படுத்துவதாகவும் அவை அமைந்துள்ளன.

### வர்க்கப் போராட்டம்

'கீறல்கள்' காட்டும் வர்க்கப் போராட்டம் மேட்டுக்குடியாருக்கும் அவரால் அடிமைகள் ஆக்கி வைக்கப்படும் தொழிலாளர்களுக்கும் இடையே நிகழ்வதாக உள்ளது. இதில் வேதமணி வாத்தியார் என்ற கதாபாத்திரம் கருத்துரைக்கும் பாத்திரமாகத் திகழ்கிறது. அவர் 'கீறல்கள்' நாவலில் ஓர் இடத்தில் விடுதலை இறையியல் கருத்தாகக் கம்யூனிசத்தையும் கிறித்தவத்தையும் இணைத்துப் பேசுவார்.

> "கிறித்தவன் யாருக்கும் பகைவனில்லை! கிறித்தவன் எந்தச் சூழ்நிலையிலும் நட்பாக வாழக் கத்துக் கொண்டவன். கத்துக் கொள்ளா விட்டால்!......கத்துக்கொள்ளணும்! கம்யூனிஸ்டுகளும் நம்முடைய நண்பர்கள்; அவர்களின் கொள்கைகளில் பாதியும் இயேசுவானவரின் கொள்கைகள் தான்"2.

என்று கூறுவதிலிருந்து கம்யூனிசத்தின் அடிநாதமாக விளங்கும் வர்க்கப்போராட்டமே கிறித்தவ வாழ்வியலுக்கும் அடித்தளமாக முன்வைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை உலக மெங்கும் வர்க்கப் புரட்சிக்காகப் பாடுபடும் மனிதர்களோடு இணைத்துக் காணும் முயற்சியை அவர் மேற்கொள்கிறார்; மட்டுமல்ல, அந்த வாழ்க் கையை ஒவ்வொரு கிறித்தவனும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். பணக்காரன் - ஏழை என்ற வர்க்க முரண்பாடு கம்யூனிசத்தின் வாயிலாகவும் ஒன்றிணைந்து பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று விழைகிறார்.

'கீறல்கள்' நாவல், கிறிஸ்துவின் போதனைகளும், மார்க்சியச் சிந்தனைகளும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு ஒத்துப்போவதைக் காட்டுகிறது. இயேசு கிறிஸ்து தீமைகளை எதிர்த்தது போலவே மார்க்சியமும் சமூகத்தீமைகளை எதிர்க்கிறது. உண்மையான கிறித்தவன் ஒரு கம்யூனிஸ்டாக இருப்பான் என்பதை ஐசக் அருமைராசன் அடிக்கடி வலியுறுத்துகிறார். முத்தையா வேலைநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிறித்தவ மக்கள் ஊர் திரண்டு போராட்டம் நடத்துவதாக நாவலில் ஐசக் அருமைராசன் சுட்டிக்காட்டுவதன் மூலம் கிறித்தவமக்கள் போராட்டத்தின் வாயிலாகவே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

கிறித்தவமதம் என்பது கோயிலில் மட்டும் அடங்கவில்லை. 'கீறல்கள்' நாவலில் வரும் சாமுவேல் நாட்டையர், 'கோயில்தான் கிறித்தவ மதமா?' என்று தன்னைக் கேட்டுக் கொள்ளும் பகுதி குறிப்பிடத்தக்கது. இன்று கோயில்களும், பள்ளிகளும், கல்லூரிகளும் தான் கிறித்தவமதம் என்று எண்ணிக்கொண்டிருப்பது எவ்வளவு அற்பத்தனம் என்று நாட்டையர்

நண்பர்கள் முத்தையாவிற்காகப் போராட்டத்தில் சேர்ந்து இறங்குகிறார்கள். ஆனால் முத்தையாவோ நேரடிப் போராட்டத்தில் ஈடுபட மறுக்கிறார். பாம்பின் வாயில் விரலைப் போடுவதா? என்ற உவமையின் வாயிலாக முத்தையா தான் போராடினால் தோற்று விடுவதாகக் கூறுகிறார். ஆனால் வேதமணி வாத்தியார் அதற்கு எதிரான கருத்தை முன்னிறுத்துகிறார். இறுதியில் சாமுவேல் நாட்டையரும் அங்கி அணிந்து கொண்டு போராட்டத்தில் கலந்து கொள்கிறார். வேதமணி வாத்தியார் மற்றும் நாட்டையரின் கருத்தை ஐசக் அருமைராசன் ஆதரிக்கிறார்.

"இந்த நாட்ல இருக்கிற ஒவ்வொரு கிறித்தவனுக்கும் ஒவ்வொரு கடம இருக்கு. இந்த நாட்ட மாத்தி அமைக்கிற வேலைல அவனுக்குப் பெரிய பங்கு இருக்கு. ஒவ்வொருத்தனும் அவனவனுக்கு விசுவா சத்துக்கு தக்கதாட்டு ஏதாவது செய்தாகணும்"3.

என்று கூறும் பழைமைவாதியான முத்தையாவைப் புதியமுடிவை நோக்கிப் பேச வைத்திருப்பது ஐசக்அருமைராசன் சுட்டிக்காட்டும் கிறித்தவத்தின் செயல்பாடு ஆகும். இதே முத்தையாவை இன்னொரு இடத்தில் வேதமணி வாத்தியார்;

"நீரு ஒரு செவுட்டு விரியன். ஓம்மகிட்ட பேசி எனக்க தொண்ட தண்ணி வறண்டு போச்சி"4.

என்று கடிந்துரைக்கிறார். முத்தையா போன்றவர்கள் திருச்சபையைக் குழப்பிவிடும் குழப்பவாதிகள் என்றும் கூறுகிறார். முத்தையா என்ற கதாபாத்திரம் படிப்படியாக உண்மை நிலையைப் புரிந்து கொண்டு செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

### iii. போராட்ட வடிவங்கள்

'கீறல்கள்' நாவல் காட்டும் போராட்டம் பல வடிவங்களில் நடைபெறுகிறது. கம்யூனிஸ்டு இயக்கத்துடன் சேர்ந்து செயல்பட நினைக்கும் வேதமணி வாத்தியார், வன்முறையை விரும் பாமல் சாத்வீகப் போராட்டத்தை முன்னிறுத்துகிறார். குறிப்பாக மூன்று விதமான போராட்டங்கள் இந்நாவலில் முன்வைக்கப்படுகின்றன. முதலாவதாக முத்தையா முன்வைக்கும் ஆத்மாவின் போராட்டம். அவர் இயேசு கிறிஸ்து ஆத்ம விடுதலைக்காகவே போராடினார் என் பதை வலியுறுத்துகிறார். இரண்டாவதாக, சாமுவேல் நாட்டையர் மற்றும் வேதமணி வாத்தியார் நடத்தும் சாத்வீகப் போராட்டம். மூன்றாவதாக, செல்லப்பா நடத்தும் அதிதீவிரவாதப் போராட்டம். முந்திரித் தொழிற்சாலையை மேட்டுக்குடியார் விலைக்கு வாங்கியதும் அங்கு வேலைபார்த்துக் கொண்டிருந்த பலரை வேலையிலிருந்து நீக்குகிறார். முத்தையாவும் அவர்களில் ஒருவர். வேலை இழந்த முத்தையா, சாமுவேல் நாட்டையரோடும், வேதமணி வாத்தியாரோடும் ஆலோசிக்கிறார். அவர்கள் அவரைப் போராடச் சொல்கிறார்கள். ஆனால் முத்தையா அதனை விரும்பவில்லை. அவர்களுக்குள் விவாதம் நடக்கிறது. வேதம் நன்கறிந்த நாட்டையர் போராட வருவதை முத்தையா பாவமாக

நினைக்கிறார். கிறித்தவன் இயேசு கிறிஸ்து கூறிய ஆத்மாவின் போராட்டத்தையே கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். சாத்வீகமான போராட்டத்தை முன்னிறுத்தும் வேதமணி வாத்தியார் கத்தியின்றி இரத்தமின்றி போராடப் போவதாகக் கூறுகிறார்.

> "என் அறிவு புரிஞ்சிக்கிட்டது சரீனு நெனச்சி நா போராடுவேன். ஒருத்தரையும் நா அடிக்கப் போவதுமில்ல, கொல்லப்போவதுமில்ல; ஆனா திட்டமா உறுதியா போராடுவேன்"5.

என்று கூறும் அவர் போராட்டத்தினால் முத்தையாவிற்கு நன்மை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் புன்னைக்காட்டிற்கு அப்போராட்டம் நன்மையை விளைவிக்கும் என்றும் கருதுகிறார். இந்த உலகத்தைத் திருத்துவதில் கிறித்தவனுக்கு அதிகப் பங்கு உண்டு என்பதை நினைத்துத் தான் போராடுவதாக அவர் கூறுகிறார்.

இப்போராட்டத்தை ஒருவகையில் தனிநபர் போராட்டம் போலவும், காந்தியத்தின் உள்ளடக்கமாகவும் கருத இடம் உள்ளது. இது போன்ற சாத்வீகமான போராட்டத்தை 'கல்லறைகள்' நாவலிலும் ஐசக் அருமைராசன் கூறியிருக்கிறார். செல்வமணி என்பவர் நிலப்பிரபுவும், திருச்சபைச் செயலாளருமான தேவசகாயம் என்பவரை எதிர்த்துப் போராடும் போதும் சாத்வீகத்தைத்தான் இறுதிவரையில் கடைப்பிடிக்கிறார். விதிவிலக்காக ஓரிடத்தில் செல்வமணி கையில் தடியைத் தூக்குகிறார். அது கூட தன்னையும் தனது இரண்டு பெண் பிள்ளைகளையும் பாதுகாப்பதற்காகவே என்று நினைக்கும்போது அவர் கூட ஒரு சாத்வீகவாதிதான்.

மூன்றாவதாக, ஐசக் அருமைராசன் வலியுறுத்தும் போராட்ட வடிவம் அதிதீவிரவாதமாகும் அதற்கு எடுத்துக்காட்டாக, 'கீறல்கள்' நாவலில் கிராமமக்களின் வறுமையைப் பயன்படுத்திச் சிறிதளவு பணம் கொடுத்து அவர்களின் தோப்புகளைத் தன் பெயருக்கு எழுதி வாங்கிப் பணக்காரராக வலம் வருகிறார் மேட்டுக் குடியார். அதற்கு செல்லப்பா கண்ட பரிகாரம் மேட்டுக்குடியாரின் தென்னந்தோப்பில் உள்ள தேங்காய்களை வலுக்கட்டாயமாகப் பறித்து எடுப்பதாகும். இதன் தொடர்ச்சியாக, மேட்டுக்குடியாரின் ஆட்கள் செல்லப்பாவை அடித்துக் காயப்படுத்துகின்றனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியே வந்த செல்லப்பா பதிலடியாக மேட்டுக்குடியார் மகனைத் தாக்குகிறான். இவ்வாறு தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் நடத்தும் அதி தீவிரவாதம் செல்லப்பா கதாபாத்திரத்தின் வாயிலாக உணர்த்தப்படுகிறது. தலைமறைவுத் தோழர்களுடன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றடைந்த செல்லப்பா இறுதியில் காவலர்களால் சுட்டுக் கொல்லப்படுகின்றான்.

செல்லப்பா என்ற கதாபாத்திரமும், கிறித்தவம் கம்யூனிசத்திற்கு வழி விடவேண்டும், கிறித்தவன் கம்யூனிஸ்டாக மாறவேண்டும் என்ற சித்தாந்தத்தையே பேசுகிறது. சமூகத்தில் நிகழும் அநீதிகளைக் கண்டு கிறித்தவன் ஒதுங்கிச் செல்லாமல் அதற்கு எதிராகப் போராட

வேண்டும் என்று கூறும் செல்லப்பா, சமுதாய மாற்றத்திற்கான போராட்டச் செயல்களில் மக்களோடு சேர்ந்து ஈடுபடாமல் தலைமறைவுத் தோழர்களுடன் சேர்ந்து செயல்பட்டுத் தன்னை அழித்துக் கொள்கிறான். இவனைப் போலவே 'கல்லறைகள்' நாவலில் வரும் சங்கரனும் போராட்டப்பாதையை வன்முறைக்களமாக மாற்றி எதிர்த்தாக்குதல் நடத்திச் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் சிக்கித் தன்னை இழக்கிறான்.

### iv. புதிய விளக்கங்கள்

விவிலியத்தை உள்ளபடியே புரிந்து கொள்ளும் கிறித்தவத்திற்கு எதிராக அதனைச் சமுதாயத்துடன் பொருத்திப்பார்த்துப் புரிந்து கொள்வதை விடுதலை இறையியல் மையப்படுத்துகிறது. மக்களிடமிருக்கும் மிகப்பெரிய ஏற்றத் தாழ்வு களுக்கு மத்தியில் கடவுள் எல்லோருக்கும் பொதுவான தந்தை என்று எப்படிச் சொல்ல முடியும்? என்பதே விடுதலை இறையியலின் அடிப்படைக் கேள்வியாகும். இந்த அடிப்படையில் ஐசக் அருமைராசன் தனது நாவல்களில் கிறித்தவத்திற்கு உரிய விளக்கங்களையும் தருகிறார். உதாரணமாக 'மதம் மனிதர்களுக்குப் பயன்படாவிட்டால் அது விலகிக் கொண்டு கம்யூனிசத்திற்கு வழிவிட வேண்டும் என்பதும், கிறித்தவர்கள் கம்யூனிஸ்டுகள் ஆவதில் தவறில்லை' என்றும் கூறுவது 'கீறல்கள்' நாவலில் வருகிறது. இது விவிலியத்திற்கு அளிக்கும் புதிய விளக்கமாகும்.

இதே நாவலில் முத்தையா என்ற கதாபாத்திரம், வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைத் திருப்பிக் காட்ட வேண்டும் என்று இயேசுநாதர் கூறியிருப்பதாகக் கூறுகிறார். உடனே வேதமணிவாத்தியார், இயேசு கிறிஸ்து கையில் சாட்டையை எடுத்தாரா? இல்லையா? என்ற கேள்வியைக் கேட்கிறார். இதிலிருந்து, 'அநீதிக்கு அடங்குவதல்ல கிறித்தவம்' என்ற புதிய விளக்கத்தை நாவலாசிரியர் முன்வைக்கிறார்.

இந்நாவலில் வரும் சாமுவேல் நாட்டையர் போராடுவதே பாவம் என்று நினைத்துக் கொண்டு இருந்தவர். ஆனால் இயேசுவின் வாழ்க்கையை நுட்பமாகப் பார்த்துக் கொண்ட பிறகு கிறித்தவன் போராடுவது பாவமில்லை என்று கூறுகிறார். கிறித்தவர்களுக்கு யார் பகை என்பதை இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையோடு பொருத்தி, புதிய விளக்கம் கூறும் இடத்தில் உலக அரசியலோடு அதனை ஒப்பாய்வு செய்யும் நாவலாசிரியர்,

"அமெரிக்கா கிறித்தவங்க வாழ்றதுனால கிறித்தவ நாடாயிராது; ரஷ்யா கம்யூனிஸ்ட் நாடானதால கிறித்தவங்களுக்குப் பகை நாடாயிராது. நாம செய்த தவறுகளைத் திருத்திக்கிடணும்! எல்லா நாடும் ஒரு கிறித்தவனுக்கு நல்ல நாடு-நட்பு நாடு!! ஒரு ரஷ்யனும் ஓர் அமெரிக்கனும் கிறித்தவனுக்கு ஒண்ணுதா. எனக்கு மாசேதுங் பகைவரில்ல; அவரும் ஒரு மனுஷன். எல்லா மனுஷனுக்காகவும் இயேசுகிறிஸ்து இந்த ஒலகத்துக்கு வந்தார்னது உண்மனா, மாசேதுங்க நான் ஏன் பகைக்கணும். அந்தப் பகை உணர்ச்சி நாம

வளர்த்துக்கிட்டது. அது கிறித்தவ வளர்ச்சியில்ல! கிறிஸ்துவுக்குப் பகைவர் யார்? கெடயாது அவரப் பகைச்சவனிய உண்டு; ஆனா கிறிஸ்து யாரையும் பகைக்கல"!6 என்று கூறுவதிலிருந்து உலக அரசியலில் கிறித்தவத்தின் பின்னணியை வேதாகமத்தின் துணைகொண்டு புதிய விளக்கம் தருவதை அறியலாம்.

'தவறான தடங்கள்' என்ற நாவலில் வரும் அர்னால்டு என்பவரின் குணநலன்கள் உருவாவதற்கு அவர் சார்ந்திருந்த கிறித்தவ அமைப்பே காரணம் என்கிறார். அமைப்பில் மிகப் பெரிய தவறுள்ளதாகவும் அந்த தவறுக்கான காரண காரியங்களை விடுதலை இறையியலாரின் அடிப்படைக்கூறுகள்தான் தீர்க்கும் என்பதிலும் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறார் நாவலாசிரியர். அந்த

## v. சமத்துவ வாழ்வு

விடுதலை இறையியலின் இறுதி இலட்சியம் சமத்துவ வாழ்வாகும். மாற்ற வேண்டியவைகளை மாற்றியும் தகர்க்க வேண்டியவைகளைத் தகர்த்தும் முன்னேறும் விடுதலை இறையியலின் இலட்சியக் கனவே சமுதாயத்தில் ஆதிக்கங்கள் அழிந்து அடிமைகள் வாழ்வுற்று சமத்துவம் கொள்வதாகும். கிறித்தவ தேவாலயங்கள் ஏழைகளைப் புறக்கணிப்பதைக் குறித்து, 'கல்லறைகள்' நாவலில் பேசியிருக்கும் ஐசக் அருமைராசன், கடவுள் முன் அனைவரும் சமம் என்பதையும், ஏழை-பணக்காரர்கள் வேறுபாடு இருக்கக்கூடாது என்பதையும் வற்புறுத்துகிறார். இதற்கு, 'கல்லறைகள்' நாவலில் வரும் எஸ்டேட் முதலாளி தேவசகாயத்தின் மகன் ஜான்சன் தம்பி மற்றும் சுக்குநீர் காப்பி வியாபாரம் செய்யும் ஏழை செல்வமணியின் மகள் ராணி இவர்களின் இணையை முன்னிறுத்துகிறார். இந்த இணையை, தேவசகாயத்தின் மனைவி ரோசம்மாள் விரும்புகிறாள். ராணி தேவாலாயத்திற்கு வருவதில்லை என்ற குற்றச்சாட்டை முன் வைக்கும் போது தேவாலயம் செல்வதற்குரிய ஆடைகள் அவர்களுக்கு இல்லை என்றும், அழுக்கு உடையுடன் வரும் திருச்சபையாரைச் சபையிலுள்ள பணக்காரர்கள் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டி அதன் வாயிலாகச் சமத்துவ வாழ்வே கிறித்தவத்தின் லட்சியம் என்பதையும் உணர்த்துகிறார்.

இந்த ஆய்வுக் கட்டுரையின் முடிவுகள் பின்வருமாறு:

ஐசக் அருமைராசனின் நாவல்களில் வெளிப்படும் விடுதலைஇறையியல் சிந்தனைகள் ஆராயப்பட்டு வெளிப்படுத்தப்பட்டன. அதற்கு ஆதாரமாக விடுதலை இறையியலின் கோட்பாடுகள் உலக அளவில் கறுப்பின, தலித் மக்கள், பெண்கள் மற்றும் காலனிய விடுதலையோடு எங்ஙனம் தொடர்பு கொண்டிருந்தன என்பவை ஒப்புநோக்கப்பட்டது. இவ்வியலில் வெளிப் படும் ஐசக் அருமைராசனின் விடுதலை இறையியல் சிந்தனைகளாக *கீழ்க்கண்டவற்றைக் கொள்ளலாம்.*

1. கிறித்தவ வாழ்வியலில் வர்க்கப் போராட் டத்தை நாவலாசிரியர் வலியுறுத்துகிறார்.
2. கிறித்தவம் செயல்பாடுடைய வாழ்க்கைமுறை என்பதை நாவலாசிரியர் நிறுவுகிறார்.
3. போராட்ட வாழ்க்கையே கிறித்தவத்தின் உள்ளீடு என்கிறார்.
4. மாறிக் கொண்டிருக்கும் சூழல்களுக்கேற்ப கிறித்தவ நெறிமுறைகளுக்குப் புதிய விளக்கங்கள் அளிக்கிறார்.
5. சமத்துவ வாழ்வை எட்டுவதே இறுதிக் குறிக்கோள் என்கிறார்.

## மேற்கோள்கள்


அல்போன்சு, தே., விடுதலை இறையியல், 1994, ப: 114.

செல்வராசு, ச, தே., தளிர்க்கும் இறையியல்கள், கட்டுரை 2009, ப : 17

ஐசக் அருமைராசன், கீறல்கள், 1975, ப: 86

ஐசக் அருமைராஜன், கீறல்கள் 1975, ப: 151

ஐசக் அருமைராசன், கீறல்கள், 1975 ப: 150

ஐசக் அருமைராசன், கீறல்கள், 1975, ப: 86


## துணைநூற்பட்டியல்


அல்போன்சு, தே., பாசறைப் பகிர்வுகள் (தொ.நூ.) எழுச்சிப் பதிப்பகம், திருச்சி - 620001, மு.ப.: ஜன-1994.

அன்பு கஸ்தூரி, க., பெண்களுக்குச் சமஉரிமை, 10, 3-வது தெரு, டாக்டர் ராகவன் காலனி, சென்னை - 600026, மு.ப. : அக் - 1989.

இராஜநாயகம், ச., தமிழ் இறையியல் களங்கள், வைகறைப் பதிப்பகம், பெஸ்கி கல்லூரி, திண்டுக்கல் - 624001, மு.ப. : ஆக-2000.

இன்னாசிமுத்து, ச. அந்தோனிகுருசு, அ. (மொ.பெ.ஆ.கள்) விடுதலை ஆன்மீகம், வைகறைப் பதிப்பகம், பெஸ்கி கல்லூரி, திண்டுக்கல் - 624004.

ஐசக் அருமைராசன், கீறல்கள், டயோசிசன் அச்சகம், நாகர்கோவில்-2 மு.ப. : ஜன-1975.

ஐசக் அருமைராசன், கல்லறைகள், பூக்கூடைப் பதிப்பகம், சென்னை, மு.ப. : ஜன-1982.

ஐசக் அருமைராசன், தவறான தடங்கள், கிறித்தவ இலக்கிய சங்கம், சென்னை, மு.ப. : ஜன-1986.

ஐசக் அருமைராசன், காரணங்களுக்கு அப்பால், மருதா ரியல் ஏஜென்ஸி, சென்னை, மு.ப. : ஜன-2001.

செல்வராசு, ச.தே. (தொ. ஆ), இறையாட்சிக்காக இறை சாட்சியாக, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல் - 624001, மு.ப. : ஜன-2005.

செல்வராசு, ச.தே. (தொ. ஆ). இறையியல் இறைவாக்கினர், வைகறைப் பதிப்பகம், பெஸ்கி கல்லூரி, திண்டுக்கல் - 624001, மு.ப. : ஜன-1999.

தூய அறிவொளியார் கோயில், கீழமுடிமன், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி - 628401, மு.ப. : ஜன-2003.

சேதுமணி மணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை - 625014, மு.ப. : ஜன-1990.

ஞான ராபின்சன், (தொ. நூ), தமிழ் கிறிஸ்தவ மரபு, தமிழ் இறையியல் நூலோர் குழு, தமிழ்நாடு இறையியல் செமினரி, அரசரடி, மதுரை - 625010, மு.ப. : ஜன-1985.

பவுல் லியோன், யார் இந்த இயேசு, வைகறைப் பதிப்பகம், பெஸ்கி கல்லூரி, திண்டுக்கல் - 624004, மு.ப. : ஆக-1995.

விடுதலைப் பாதையில், விடுதலை நாள் குறிப்பேடு, (தொகுப்பு- 2,3) தமிழக இளம் பணியாளர் இயக்கம்,